**வ/ப மகாவலி கன்சல்ரன்சி பியூரோ (தனியார்) கம்பனி - 2024**
**---------------------------------------------------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வ/ப மகாவலி கன்சல்ரன்சி பியூரோ (தனியார்) கம்பனியின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்ட மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு நியமங்களுக்கு உரிய தகவல்களும் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து கம்பனியின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனி கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும்

கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனி நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனி வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து

செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இயலுமான அளவில் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனி செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனி ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டுத் நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் குறிப்பு இலக்கம் 2.1 இன் படி, நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சிறிய மற்றும் நடுத்தர அளவிலான | அவதானிப்புடன் இணங்குகின்றோம். | நியமங்களின் மூலம் வெளிப்படுத்தப்படும் விடயங்கள் தொடர்பில் சகல சந்தர்ப்பங்களிலும் |

| | | | |
|---|---|---|---|
| | நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டுத் நியமங்களிற்கு இணங்க பின்பற்றப்படுவதாகக் குறிப்பிடப் பட்டிருந்தது. அதன்படி, அந் நியமங்களின் மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பில் எவ்வப்போதும் அத்தரநிலைகளே பயன்படுத்தப்பட வேண்டும். எனினும், குறிப்பு இலக்கம் 3.3.1 இல் வருமானமானது இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 15 இன் படியும், குறிப்பு 3.2.2 இன் பணிக்கொடை ஒதுக்கீடு இலங்கை கணக்கீட்டு நியமம் 19 இன் படியும் மேற்கொள்ளப்படுவதாக குறிப்பு இல. 3.3 இல் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல் இலங்கை கணக்கீட்டு நியமம் 1 இன் மேற்கொள்ளப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்தது. | | அந் நியமத்தைப் பயன்படுத்த வேண்டும். |
| (ஆ) | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான கணக்கீட்டு நியமம் 7 இன் 2 ஆம் பந்திக்கமைய, 03 மாதங்கள் அல்லது அதற்குக் குறைவான காலப்பகுதிக்கான முதலீடுகள், காசு அல்லது காசுக்குச் சமமானவை எனக் காட்டப்பட வேண்டும். இருப்பினும், 03 மாத காலப்பகுதிக்கான ரூபா 20 மில்லியன் பெறுமதியான நிலையான வைப்புகள் நீண்டகால முதலீடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தன. | அவதானிக்கப்பட்டுள்ள முதலீடுகள் 2024 மார்ச் மாதம் முதல் 03 மாத காலத்திற்கு முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அம் முதலீடுகள் தானியக்க ரீதியாக மீள் முதலீடு செய்யப்படுவதனாலும், மீளாய்வாண்டின் இறுதியில் அம் முதலீடு கள் 09 மாதங்களுக்கும் மேலாக தொடர்ச்சியாகக் காணப்பட்டமையினாலும் குறித்த முதலீடுகள் நீண்டகால முதலீடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளன. | நியமங்களின் படி, 03 மாதங்கள் அல்லது அதற்குக் குறைவான காலப்பகுதிக்கான முதலீடுகள் காசு அல்லது காசுக்குச் சமமானவை எனக் காண்பிக்கப்பட வேண்டும். |
| (இ) | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான கணக்கீட்டு நியமம் 2 இன் 52 ஆம் இலக்கப் பந்திக்கமைய, நிறுவனங்களால் அதன் சொத்துக்கள், பொறுப்புக்கள் அல்லது வருமானச் செலவுகளை ஈடுசெய்தலாகாத போதிலும் 2025 ஆம் ஆண்டிற்காக ‘‘வெவ்கம் புபுதுவ" (செயற்திட்டத்திலிருந்து ஏற்கனவே கிடைக்கப்பெற்ற வருமானமான ரூபா 132.5 மில்லியனை ‘‘வெவ்கம் புபுதுவ" செயற்திட்டத்தின் கட்டுப்பாட்டுக் கணக்கில் பதிவிடப்பட்டதன் காரணமாக அதிலிருந்த ரூபா. 15.3 மில்லியன் வரவேண்டிய மீதியுடன் ஈடுசெய்யப்பட்டிருந்தது. | அவதானிப்புடன் உடன்படுகின்றோம். எதிர்காலத்தில் சுட்டிக்காட்டப்பட்டவாறு நடவடிக்கை எடுக்கப்படும். | செயற்திட்டத்திலிருந்து கிடைக்கப்பெற்ற வருமானம் மற்றும் வரவேண்டிய மீதிகளைத் தனித்தனியாகக் காண்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான கணக்கீட்டு நியமத்தின் 11 இன் 21 ஆம் பந்திக்கமைய, நிதிச் சொத்துக்களில் பெறுமதித்தேய்வு இழப்பு ஏற்பட்டிருப்பின், அதற்கான இழப்புக்களைக் கணக்கிட வேண்டும். இருப்பினும், வரவேண்டிய மீதியான ரூபா 24.67 மில்லியனில், 05 வருடங்களுக்கு மேலான ரூபா 6.9 மில்லியன் நிலுவைகள் காணப்பட்ட போதிலும், அதற்கான பெறுமதித்தேய்வு இழப்பு களுக்காக ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | அவதானிப்புடன் உடன் படுகின்றோம். எதிர்வரும் ஆண்டில் அதற்கான ஒதுக்கீடுகளைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு நியமத்திற்கமைய, அறவிடக்கூடிய நிலை குறித்து மதிப்பீடு செய்யப்பட்டு பெறுமதித் தேய்வு இழப்பிற்கான ஒதுக்கீடுகளை மேற்கொள்ள வேண்டும். |
| (உ) | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான கணக்கீட்டு நியமத்தின் 29 இன் 2 ஆம் பந்தி மற்றும் கம்பனி நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கை இலக்கம் 3.3.2.4 இன் படி, வரிச் செலவைக் கணக்கிடும் போது பிற்போடப்பட்ட வரியையும் கருத்திற் கொள்ள வேண்டிய போதிலும் கம்பனி அதன் படி செயற்பட்டிருக்க வில்லை. சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான கணக்கீட்டு நியமத்தின் 29 இன் 38 ஆம் 39 ஆம் பந்திகளின் படி ஆண்டிற்கான வருமான வரி கணிப்பிடப்பட்டு அவசியமான வெளிப்படுத்தல்கள் நிதிக்கூற்றில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புடன் உடன்ப டுகின்றோம். எதிர்வரும் ஆண்டில் இதனைச் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நியமத்திற்கமைய, வரிச் செலவு கணக்கிடப்பட வேண்டியதுடன் அவசியமான வெளிப்படுத்தல்களையும் மேற்கொள்ள வேண்டும். ’ |
| (ஊ) | கம்பனியின் 2024 ஆம் ஆண்டு வருமானத்தில் ரூபா 283.88 மில்லியன், அதாவது மொத்த வருமானத்தில் 87 சதவீதமானது “வெவ்கம புபுதுவ” திட்டத்தின் கீழ் குளங்களை அளவீடு செய்தல், எல்லை நிர்ணயம் மற்றும் கிராமிய நீர்ப்பாசனத் தொகுதிகளைக் கண்காணித்தல் என்பவற்றிற்காகக் கிடைத்துள்ளது. கம்பனியின் பிரதம நிறைவேற்று அதிகாரி இத்திட்டத்தின் பணிப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார். எவ்வாறாயினும், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமம் 33 இன் 8 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களின் தொடர்புடைய தரப்பினர் தொடர்பிலான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | இது அடுத்த வருடத்தில் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப் படும். மேலும், நலன் முரண்பாடு (Conflict of Interest) தொடர்பாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள கையேடு மற்றும் நிபுணர் கருத்துக்களைக் கருத்திற் கொள்ளும் போது, அரச சேவையில் இரு அரச நிறுவனங் களில் இரு பதவிகளை வகிப்பது நலன் முரண் பாடாகாது எனவும், தனியார் நிறுவனங் களுடனான தொடர்புகள் மூலமே இத்தகைய | நிதிக்கூற்றுக்களில் தொடர்புடைய தரப்பினர் தொடர்பிலான வெளிப்படுத்தல்களை மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நலன் முரண்பாடுகள் ஏற்படுகின்றன என்பதையும் வலியுறுத்துகின்றோம். | |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மொரகஹகந்த சுற்றுலா விடுதியை அமைக்கும் போது மேலதிகமாகச் செலுத்திய ரூபா 20.2 மில்லியன் ஒப்பந்தக்காரரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகையாக 05 ஆண்டுகளுக்கும் மேலாக நிதிக்கூற்றுக்களில் பெறவேண்டிய தொகையாக நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காட்டப் பட்டிருந்தது. இம் முழுமையான பெறுமதிக்காகவும் இழப்பீட்டு நட்டம் இனங்காணப் பட்டிருந்ததுடன், இவ் இழப்பீட்டு நட்டம் பெறவேண்டிய மீதியிலிருந்து கழித்துக் காட்டப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யாது இழப்பீட்டு ஒதுக்கீடு வர்த்தக மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய மீதிகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | அவதானிப்புடன் இணங்குகின்றோம். இம்மீதிகள் குறித்து தொடர்ந்தும் சட்ட ஆலோசனைகளைப் பெற்று வருவதால், அவ்வாறு இழப்பீட்டு நட்டம் பெற வேண்டிய மீதிகளிலிருந்து கழிக்கப்பட்டு வெளிப்படுத்தாதிருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இழப்பீட்டு நட்டங்களை அது தொடர்பான பெறவேண்டிய வருமானத்திலிருந்து கழித்து வெளிப்படுத்த வேண்டும். |
| (ஆ) | காசுப்பாய்ச்சல் கூற்றில் தொழிற்படு மூலதன மாற்றங்களின் கீழ் சீராக்கப்பட வேண்டிய முன்னைய ஆண்டுச் சீராக்கங்கள் ரூபா 2.3 மில்லியன், தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னர் தொழிற்படு இலாபத்தைக் கணக்கிடும் போது நடப்பாண்டின் வரிக்கு முன்னரான நிகர இலாபத்துடன் காசு அல்லாத கொடுக்கல் வாங்கலாகச் சீராக்கப்பட்டிருந்தது. | அவதானிப்புடன் இணங்கவில்லை. அப் பெறுமதி முன்னைய ஆண்டுச் சீராக்கம் என்பதனால் நடப்பாண்டின் இலாபத்திலிருந்து கழித்து முன்னைய ஆண்டிற்குரிய பெறுவனவாகச் சீராக்கம் செய்யப்பட்டு பதியப்பட்டிருந்தது. | முன்னைய ஆண்டுச் சீராக்கங்கள் காசுப்பாய்ச்சல் கூற்றில் தொழிற்படு மூலதன மாற்றங்களின் கீழ் சீராக்கப்பட வேண்டும். |
| (இ) | நிதிக்கூற்றுக்களுக்கான கணக்கீட்டுக் குறிப்புக்கள் 3.1.1.3 இல் நடைமுறையல்லாச் சொத்துக்களின் பெறுமானத் தேய்வு முறை, பயனுள்ள ஆயுட்காலம் மற்றும் எஞ்சிய கைக்கெட்டிய பெறுமதி ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் மீளாய்வு செய்யப்படும் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், 2024 திசெம்பர் 31 இல் அவ்வாறு செய்யப்படாத முழுமையாகப் பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 11.95 மில்லியனாகக் காணப்பட்டது. | அவதானிப்புடன் இணங்குகின்றோம். எதிர்வரும் ஆண்டில் உரிய சீராக்கங்களைச் செய்து நிதிக்கூற்றுக்களுக்கான கணக்கீட்டு நியமங்களின் படி நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டுக் குறிப்பின் படி, நடைமுறையல்லாச் சொத்துக்களின் பெறுமானத் தேய்வு முறை, பயனுள்ள ஆயுட்காலம் மற்றும் எஞ்சிய கைக்கெட்டிய பெறுமதி ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் திருத்தப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்காய்விற்கான எழுத்து மூல சான்றுகள் இன்மை

| | விடயம் | தொகை (ரூபா) | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வுச் சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | 10 ஆண்டுகளுக்கு மேலாகத் தீர்க்கப்படாத வரிப் பொறுப்பு | 611,866 | இருப்பை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் | இவ்வரிப் பொறுப்பு தொடர்பாக MCB நிறுவனத்திடம் எவ்வித தகவல்களும் இல்லை என்பதுடன், எதிர்காலத்தில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும். | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் கலந்துரையாடி இவ்வரிப் பொறுப்பைத் தீர்க்க வேண்டும். |
| (ஆ) | 05 ஆண்டுகளைக் கடந்த பெறவேண்டிய மீதிகள் | 6,902,509 | இருப்பை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் | பெறவேண்டிய சகல மீதிகளுக்கான மீதிகளின் உறுதிப்படுத்தல் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டிருந்த போதிலும் குறித்த நிறுவனங்களில் இருந்து உறுதிப்படுத்தல்கள் கிடைக்கப் பெற்றிருக்கவில்லை. | பெறவேண்டிய மீதிகளை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான எழுத்து மூலச் சான்றுகளை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்க வேண்டும். |
| (இ) | நிலையான வைப்பு வட்டி வருமானம் | 4,650,031 | நிலையான வைப்புக்களைப் புதுப்பிக்கும் போது வழங்கப்பட்ட புதிய வைப்புச் சான்றிதழ்கள் அல்லது புதுப்பித்தல் அறிவித்தல்கள் | முதலீடு தொடர்பான அனைத்துத் தகவல்களையும் கொண்ட கோப்பினை எவ்வேளையிலும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்க முடியும். ’ | நிலையான வைப்பு வட்டி வருமானங்களை உறுதிப்படுத்த நிலையான வைப்புச் சான்றிதழ்கள் மற்றும் புதுப்பித்தல் அறிவித்தல்களைக் கணக்காய்விற்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் ஆகியவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | தேசிய கணக்காய்வுச் சட்டம் | | | |
| (i) | 38 (1) (உ) | 03 மாத காலப்பகுதியைக் கடந்த 06 கணக்காய்வு ஐயவினாக்களுக்குப் பதில்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | பதில்கள் வழங்கப்படவில்லை. | நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்கு கணக்காய்வு ஐயவினாக்களுக்குப் பதில்கள் வழங்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | 38 (2) ஆம் பிரிவு | உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் வினைத்திறன் குறித்து அவ்வப்போது மீளாய்வு செய்து அதன் பிரதிகளை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்கியிருக்கவில்லை. | பந்தியுடன் இணங்குகின்றோம். எதிர்காலத்தில் முறைமையின் வினைத்திறனை மீளாய்வு செய்து கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிக்கை சமர்ப்பிக்க எதிர்பார்க்கின்றோம். | 'உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் வினைத்திறனைப் பரிசோதித்து கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிக்கையிட வேண்டும். |
| (ஆ) | 2015 ஜூன் 17 ஆம் திகதிய பீஈடீ 3/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| (i) | 2.1 ஆம் பந்தி | கம்பனிச் செயலாளர், பணிப்பாளர் சபையின் உறுப்பினராக இல்லாத போதிலும், கடந்த ஆண்டுகளைப் போலவே 2024 ஆம் ஆண்டிலும் இடம்பெற்ற பணிப்பாளர் சபை அமர்வுகளில் பங்கேற்றமைக்காக ஒரு அமர்விற்கு ரூபா 6,000 வீதம் மொத்தம் ரூபா 42,000 தொகை வருகை தந்தமைக்கான படிப்பணமாகச் செலுத்தப்பட்டிருந்தது. | இது தொடர்பான விளக்கங்களைப் பின்னர் சமர்ப்பிக்கின்றேன். | கொடுப்பனவை வழங்கியமையுடன் தொடர்புடைய பொறுப்பான தரப்பினரிடமிருந்து இத்தொகையை அறவிட்டுக்கொள்ள வேண்டும். |
| (ii) | 2.3 ஆம் பந்தி | கம்பனியின் தலைவருக்கு வழங்கக்கூடிய மாதாந்தக் கொடுப்பனவு ரூபா 37,500 ஆன போதிலும், 2024 செப்தெம்பர் முதல் அது ரூபா 57,500 ஆக அதிகரிக்கப்பட்டு வழங்கப்பட்டிருந்தது. | மேற்படி | அனுமதியின்றி வழங்கப்பட்ட தொகையை அதற்குப் பொறுப்பான தரப்பினரிடமிருந்து அறவிட்டுக்கொள்ள வேண்டும். |
| (iii) | 2.11 ஆம் பந்தி | கம்பனியின் தலைவருக்குப் பணிப்பாளர் சபை அமர்வுகளில் | மேற்படி | மேற்படி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பங்கேற்பதற்கான வருகைக் கொடுப்பனவைப் பெறுவதற்கு உரித்தற்ற போதிலும், கடந்த ஆண்டுகளைப் போன்று மீளாய்வாண்டிலும் கம்பனியின் தலைவருக்காக ரூபா 6,000 கொடுப்பனவு வழங்கப்பட்டிருந்ததுடன், 2024 செப்டம்பர் முதல் அக்கொடுப்பனவு ரூபா 10,000 வரை அதிகரிக்கப்பட்டு வழங்கப்பட்டிருந்தது. | | |
| (இ) | 2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட அரச நிறுவனங்களின் நல்ஆளுகைக்கான வழிகாட்டிக் கோவை | | | |
| (i) | 2.2.2(அ) ஆம் பந்தி | பணிப்பாளர் சபையின் தலைவரால் குறைந்தது மாதத்திற்கு ஒரு முறையாவது பணிப்பாளர் சபையைக் கூட்ட வேண்டும் என்ற போதிலும், மீளாய்வாண்டில் 07 பணிப்பாளர் சபை அமர்வுகள் மாத்திரமே நடத்தப்பட்டிருந்தன. ' | அவதானிப்புடன் இணங்குகின்றோம். | அரச நிறுவனங்கள் சுற்றறிக்கையின் படி பணிப்பாளர் சபை அமர்வுகளை நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | 2.3 ஆம் பந்தி | நடைமுறைப்படுத்தக்கூடிய குறுகிய கால இலக்குகளை அடைவதற்குத் தேவையான குறிப்பிட்ட நடவடிக்கைகள் மற்றும் பணிகள் குறித்த விரிவான தகவல்களை உள்ளடக்கிய செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் கம்பனியின் நீண்டகால நோக்கு மற்றும் ஒட்டுமொத்த திசைமுகத்தை வரையறுக்கும் வகையில் தயாரிக்கப்பட்ட மூலோபாயத் திட்டம் என்பன தயாரிக்கப்பட்டு, விடயப்பரப்பிற்குரிய அமைச்சின் செயலாளரின் ஊடாக பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியைப் பெற்றுக்கொண்டிருக்கவில்லை. | கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டம் தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றது. | பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் படி செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் மூலோபாயத் திட்டத்தைத் தயாரித்து உரிய அனுமதிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஈ) | 2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட செயற்பாட்டுக் கையேடு | | | | |
| (i) | 3.1 ஆம் பந்தி | (i) | ஊழியர் பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் சம்பளக் கட்டமைப்பு மற்றும் கொடுப்பனவுகள் உள்ளிட்ட ஊழியர் எண்ணிக்கை தொடர்பான கோரிக்கைகளுக்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பான விளக்கங்களை பின்னர் சமர்ப்பிக்கின்றேன். | ஆட்சேர்ப்பு நடைமுறை, சம்பளக் கட்டமைப்பு மற்றும் கொடுப்பனவுகளுக்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும். |
| | | (ii) | கம்பனியின் நிரந்தர மற்றும் நிரந்தரமற்ற பணியாளர்களுக்குரிய அனைத்து உத்தியோகத்தர்களின்/ஊழியர்களின் அடிப்படைச் சம்பளம்/கொடுப்பனவுகள் 2024 செப்தெம்பர் முதல் ரூபா 20,000 இனால் அதிகரிக்கப்பட்டிருந்ததுடன், அதற்காக பணிப்பாளர் சபை அனுமதி மாத்திரமே பெறப்பட்டிருந்தது. | பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் நிரந்தர பணியாளர்களுக்குச் சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளது. ’ | அனுமதியின்றி மேற்கொள்ளப்பட்ட சம்பள அதிகரிப்பிற்குப் பொறுப்பான தரப்பினரிடமிருந்து அவ்வாறு வழங்கப்பட்ட தொகையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | 5.3 ஆம் பந்தி | | வரிக்கு பின்னரான நிகர இலாபத்தில் குறைந்தது 30 சதவீதத்தையாவது இலாபப் பங்காகத் திரட்டப்பட்ட நிதிக்கு செலுத்த வேண்டும் என்ற போதிலும், ரூபா 74.47 மில்லியன் வரிக்கு பின்னரான இலாபத்திலிருந்து இலாபப் பங்காக ரூபா 6.5 மில்லியன் அதாவது 8.7 சதவீதம் மாத்திரமே ஒதுக்கப்பட்டிருந்தது. | திரட்டப்பட்ட நிதிக்கு இலாபப் பங்கு செலுத்துவது கணக்காய்விற்குப் பின்னர் பணிப்பாளர் சபையின் அனுமதியைப் பெற்று மேற்கொள்ளப்படும். மேலும் மீளாய்வாண்டில் வரிக்கு பின்னரான இலாபம், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பெற்றுள்ள போதிலும் | பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் படி இலாபத்தில் குறைந்தது 30 சதவீதத்தையாவது இலாபப் பங்காகத் திரட்டப்பட்ட நிதிக்குச் செலுத்த வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | வருமான மூலங்கள் நிலையான நிலையை அடையாத காரணத்தால் அவதானிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள சதவீத இலாபப் பங்கு செலுத்துவதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. | |
| (iii) | 6.6 ஆம் பந்தி | வருடாந்த அறிக்கை யானது கணக்கீட்டு ஆண்டு முடிவடைந்து 05 மாதங்களுக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், கம்பனியின் 2018 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரையிலான வருடாந்த அறிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 வருடாந்த அறிக்கையில் செய்யப்பட வேண்டிய சீரரக்கங்கள் பூர்த்தி செய்யப்பட்டு அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன், 2023 மற்றும் 2024 வருடாந்த அறிக்கைகளின் வரைவுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. | வருடாந்த அறிக்கைகளை நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iv) | 6.7 ஆம் பிரிவு | கம்பனியின் நிலையான சொத்துக்கள் தொடர்பாக வருடாந்த பண்டச் சரிபார்ப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2024.12.31 ஆம் திகதியிலுள்ளவாறான வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கை இறுதிக் கணக்குகளுடன் உங்களிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | பதில்களை வழங்கும் போது பொறுப்புடன் சரியான பதில்களை வழங்குவதற்கும், இதுவரை சமர்ப்பிக்கப்படாத பொருள் மெய்மையாய்வுகள் அறிக்கை சமர்ப்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (v) | 7.2 ஆம் பிரிவு | கம்பனியின் செயலாற்றுகையை மதிப்பீடு செய்வதற்காக அடிப்படைச் செயலாற்றுகை குறிகாட்டிகள் மற்றும் தொழிற்பாட்டுச் செயலாற்றுகை குறிகாட்டிகளை நிறுவி அதற்காகத் திறைசேரியின் அனுமதியைப் பெற வேண்டும் என்ற போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புடன் இணங்குகின்றோம். எதிர்வரும் ஆண்டு முதல் செயலாற்றுகைத் தரவு களைப் பெற்றுக் கொள்வதற்கான திட்டங்களைத் தயாரித்து திறைசேரியின் அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்கும் மாதாந்த/ காலாண்டு மற்றும் வருடாந்த தரவுகளை அமைச்சுக்கும் திறைசேரிக்கும் | அடிப்படைச் செயலாற்றுகை குறிகாட்டிகள் மற்றும் தொழிற்பாட்டுச் செயலாற்றுகை குறிகாட்டிகளை நிறுவி அதற்காகத் திறைசேரியின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அனுப்புவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (vi) | 7.5 ஆம் பந்தி | கம்பனியின் மாதாந்த, காலாண்டு மற்றும் வருடாந்த செயலாற்றுகை அறிக்கைகளை விடயப்பரப்பிற்குரிய அமைச்சுக்கும் பொதுத் திறைசேரிக்கும் அனுப்ப வேண்டும் என்ற போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | மேற்படி | சுற்றறிக்கையின் படி கம்பனியின் மாதாந்த, காலாண்டு மற்றும் வருடாந்த செயலாற்றுகை அறிக்கைகளை விடயப்பரப்பிற்குரிய அமைச்சுக்கும் பொதுத் திறைசேரிக்கும் அனுப்ப வேண்டும். |
| (vii) | 7.6 ஆம் பந்தி | கம்பனியின் செயலாற்றுகை தொடர்பான தகவல்களை விடயப்பரப்பிற்குரிய அமைச்சுக்கும் பொதுத் திறைசேரிக்கும் அறிக்கையிடுவதற்காக உத்தியோகத்தர் ஒருவரை நியமிக்க வேண்டும் என்ற போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புடன் இணங்குகின்றோம். எதிர்காலத்தில் உத்தியோகத்தர் ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும். ’ | சுற்றறிக்கையின் படி கம்பனியின் செயலாற்றுகை தகவல்களை விடயப்பரப்பிற்குரிய அமைச்சுக்கும் பொதுத் திறைசேரிக்கும் அறிக்கையிட உத்தியோகத்தர் ஒருவரை நியமிக்க வேண்டும். |
| (உ) | 2022 ஜனவரி 18 ஆம் திகதிய PED 2/2022 ஆம் இலக்க பொது முயற்சிகள் நிறுவனச் சுற்றறிக்கையின் 6 ஆம் பந்தி | பிரதம நிறைவேற்று அதிகாரிக்கு மாதாந்த தொடர்பாடல் கொடுப்பன வாக ரூபா 4,250 வழங்க முடியும் என்ற போதிலும், 2024 செப்தெம்பர் முதல் அக்கொடுப்பனவு ரூபா 5,000 வீதம் வழங்கப்பட்டிருந்தது. இச் சுற்றறிக்கைக்கு முரணாக நிதி முகாமையாளர் மற்றும் மனித வள முகாமையாளர், நிதிச் சேவை நிறைவேற்று அதிகாரி, தரவு உள்ளீட்டு உத்தியோகத்தர், சாரதி மற்றும் உதவியாளர் ஆகியோருக்கு முறையே ரூபா 4,000, ரூபா 2,000, ரூபா 1,500 மற்றும் ரூபா 1,000 வீதம் தொடர்பாடல் கொடுப்பனவு 2024 செப்தெம்பர் முதல் மாதாந்தம் வழங்கப்பட்டிருந்தது. | இது தொடர்பாக ஆராய்ந்து சமர்ப்பிக்கின்றேன் | முறையான அனுமதியின்றி வழங்கப்பட்ட தொடர்பாடல் கொடுப்பனவை பொறுப்பான தரப்பினரிடமிருந்து அறவிட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஊ) | 2023 திசெம்பர் 11 ஆம் திகதிய PED 04/2023 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| (i) | 01 ஆம் பந்தி | மிகை ஊதியம் வழங்குவதற்காக 2022 ஆம் ஆண்டில் ஈட்டப்பட்ட வரிக்கு பின்னரான இலாபத்தில் குறைந்தது 30 சதவீதத்திற்குச் சமமான தொகையை இலாபப் பங்காக/வரியாகத் திரட்டப் பட்ட நிதிக்கு வரவு வைக்கப்பட வேண்டிய போதிலும், கம்பனி அவ்வாறு செய்யாது 21 பேருக்கு ரூபா 504,167 ஐ 2023 ஆம் ஆண்டிற்காக 2024 ஆம் ஆண்டில் மிகை ஊதியமாக வழங்கியிருந்தது. | இணங்குகின்றோம். கடந்த 06 ஆண்டு காலப்பகுதியில் மிகை ஊதியம் வழங்கப்படாததால் ஊழியர் ஊக்குவிப்பிற்காக மிகை ஊதியம் வழங்கப்பட்டது. | சுற்றறிக்கையின் படி இலாபப் பங்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுடன், அவ்வாறு வழங்கப்படாத சந்தர்ப்பங்களில் மிகை ஊதியம் வழங்கப்படலாகாது. |
| (ii) | 2.1 ஆம் பந்தி | மிகை ஊதியம் பெறுவதற்கான உரிமை, கம்பனியின் பணியாளர்களுக்கு மாத்திரமே உண்டு என மேற்படி சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், கம்பனி அதன் பணிப்பாளர் சபையின் ஐந்து உறுப்பினர்களுக்கும் அரச மற்றும் பகுதியளவான அரச நிறுவனங்களில் நிரந்தர நியமனங்களைக் கொண்டுள்ள கம்பனியின் பிரதம நிறைவேற்று அதிகாரி, செயற்திட்ட முகாமையாளர் மற்றும் கம்பனிச் செயலாளர் ஆகிய பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்களுக்கும் ரூபா 25,000 வீதம் மிகை ஊதியம் வழங்கப்பட்டிருந்தது. | இது தொடர்பாக ஆராய்ந்து சமர்ப்பிக்கின்றேன். | சுற்றறிக்கைக்கு முரணாக வழங்கப்பட்ட மிகை ஊதியங்களை அந்தப் பொறுப்பான தரப்பினரிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | 2024 ஜனவரி 12 ஆம் திகதிய 01/2024 ஆம் | 2024 மார்ச் வரை செலுத்த வேண்டிய மாதாந்த வாழ்க்கைச் செலவுப் படி | இவ்வாழ்க்கைச் செலவுப் படி தொடர்பாக மேலதிகக் | மேலதிகமாக வழங்கப்பட்ட வாழ்க்கைச் செலவுப் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை | | ரூபா 12,800 ஆக இருந்த போதிலும், கம்பனி பெப்ரவரி மற்றும் மார்ச் ஆகிய இரு மாதங்களுக்கு ரூபா 13,550 வீதமும், 2024 ஏப்ரல் முதல் செலுத்த வேண்டிய மாதாந்த வாழ்க்கைச் செலவுப் படி ரூபா 17,800 ஆக இருந்த போதிலும் அது ரூபா 18,550 வீதமும் வழங்கப்பட்டிருந்தது. அதற்கமைய கம்பனி கடந்த ஆண்டுகளைப் போலவே 2024 ஆம் ஆண்டிலும் வாழ்க்கைச் செலவுப் படியாக அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள தொகையை விட ஒருவருக்கு ரூபா 750 வீதம் மேலதிகமாக வழங்கியிருந்தது. | கொடுப்பனவு இடம்பெற்றிருப்பின் இது குறித்து ஆராய்ந்து அறவிட நடவடிக்கை எடுக்கப்படும். ’ | படியைப் பொறுப்பான தரப்பினரிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஏ) | 2024 பெப்ரவரி 28 ஆம் திகதிய 01/2024 பொது முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் 2024 ஜனவரி 10 ஆம் திகதிய 01/2024 தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை | (i) | 2024 ஆம் ஆண்டில் மாதிரியாகப் பெறப்பட்ட 28 நாட்கள் மற்றும் 07 நாட்களுக்காக பிரதான உணவு வேளைகள் உள்ளிட்ட உணவிற்காக முறையே ரூபா 251,640 மற்றும் ரூபா 77,142 தொகையை கம்பனி செலவிட்டிருந்தது. | நிறுவனத்தின் ஊழியர் நலன்புரிக்காக வேலை செய்யும் ஊழியர்களுக்குக் காலை மற்றும் மாலைத் தேநீர் வழங்குவது இயல்பானதாகும் என்பதுடன் இதற்கு மேலதிகமாக நிறுவனத்தின் ஊழியர்கள் இரவு வரை அலுவலகத்தில் பணியாற்றுவார்களாயின் (இரவு 10 மணிக்கு மேல்) இரவு உணவும் வழங்கப்படுகின்றது. மேலும் வெளிவாரி விருந்தினர்களுக்குத் தேநீர் வழங்க வேண்டியிருப்பதால் இதற்கான செலவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | சுற்றறிக்கையின் படி செலவுகளை மேற்கொள்ள வேண்டும். |
| | | (ii) | வெளிநாட்டு நன்கொடை மூலங்கள் மூலம் நிதியளிக்கப்படும் சந்தர்ப்பங்களில்கூட பயிற்சிப் பட்டறைகளை நடத்தும் போது அதிகளவில் | இது தொடர்பாக ஆராய்ந்து சமர்ப்பிக்கின்றேன். | சுற்றறிக்கையின் படி பயிற்சிப் பட்டறைகளை நடத்தும் போது எப்போதுமே அரச நிறுவனங்களுக்குச் |

| | | | |
|---|---|---|---|
| | செலவு செய்து ஹோட்டல்கள், மாநாட்டு மண்டபங்களைப் பயன்படுத்தலாகாது எனவும், அதற்காக அரச நிறுவனங்களுக்குச் சொந்தமான மாநாட்டு மண்டபங்களைப் பயன்படுத்த வேண்டும் எனவும் குறிப்பிடப் பட்டிருக்கையில், 2024 ஆம் ஆண்டில் 7 சந்தர்ப்பங்களில் ரூபா 7.4 மில்லியன் செலவில் பயிற்சித் திட்டங்கள் நடத்தப்பட்டிருந்தன. அதில் ரூபா 5.9 மில்லியன் செலவில் நடத்தப்பட்ட 4 பயிற்சித் திட்டங்களில் பங்கேற்றவர்கள் யார், அவர்களின் பதவிகள் என்ன மற்றும் பட்டறையின் இறுதியில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் தொடர்பான எதுவும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. இப்பயிற்சிப் பட்டறைகளில் கம்பனியின் ஒன்றுகூடல் நாள் எனும் பட்டறையொன்று காலி உனவட்டுன பிரதேசத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றில் நடத்தப்பட்டு அதற்காக ரூபா 296,690 செலவிடப்பட்டிருந்ததுடன், கம்பனியில் 08 நிரந்தர ஊழியர்கள் மாத்திரமே இருக்கையில் இப்பயிற்சிப் பட்டறையில் 31 பேர் பங்கேற்றுள்ளமை பற்றுச்சீட்டுப் பரிசோதனையில் அவதானிக்கப்பட்டது. | | சொந்தமான மாநாட்டு மண்டபங்களைப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுடன் செலவுகள் குறையும் வகையில் பயிற்சிப் பட்டறைகளை ஏற்பாடு செய்ய வேண்டும். விசாரணையொன்றை நடத்தி மேலதிக நபர்களுக்காக மேற்கொண்ட செலவுகளைப் பொறுப்பான தரப்பினரிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | 2024 ஆம் ஆண்டின் 04 ஆம் பணிப்பாளர் சபை அமர்வு 2024 ஆகஸ்ட் 15 ஆம் திகதி கொழும்பிலுள்ள நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் நடத்தப்பட்டிருந்ததுடன், அதற்காக ரூபா 457,795 செலவிடப்பட்டிருந்தது. | 2024 ஆகஸ்ட் 15 ஆம் திகதி பணிப்பாளர் சபை அமர்வு கிங்ஸ்பரி ஹோட்டலில் நடத்தப்பட்டது, அதற்கு முன்னர் நடைபெற்ற பணிப்பாளர் சபை அமர்வில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி | பணிப்பாளர் சபை அமர்வுகளை மகாவலி அதிகார சபையின் மாநாட்டு மண்டபத்தில் நடத்தாது இவ்வாறு ஹோட்டலில் நடத்தத் தீர்மானித்த தரப்பினரிடமிருந்து |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கம்பனியின் பணிப்பாளர் சபை 06 உறுப்பினர்களைக் கொண்டிருந்த போதிலும், பணிப்பாளர் சபை அமர்வு அறிக்கையின் படி இக்கூட்டத்தில் 12 பேர் பங்கேற்றதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது, எனினும், பற்றுச்சீட்டுக்களின் படி அதற்காக 20 பேர் பங்கேற்றிருந்தனர். | கம்பனியின் தற்போதைய நிலைமை மற்றும் எதிர்பார்க்கப்படும் எதிர்கால இலக்குகள் குறித்து பணிப்பாளர் சபை அறிந்துகொள்வதற்காக விடுக்கப்பட்ட வேண்டுகோளின் பேரில் அதற்குப் பொருத்தமான இடமாக கிங்ஸ்பரி ஹோட்டல் தெரிவு செய்யப்பட்டது. இதன்போது பணிப்பாளர் சபை உறுப்பினர்களுக்கு மேலதிகமாக கம்பனியின் ஒவ்வொரு பிரிவின் முகாமையாளர்களும் பங்கேற்றதால் பணிப்பாளர் சபை அமர்வில் பன்னிரண்டு பேர் பங்கேற்றுள்ளனர். மேலும் கம்பனியினால் முன்னெடுக்கப்படும் பல்வேறு திட்டங்களை வழங்கியுள்ள அமைச்சின் சில உயர் அதிகாரிகளும் இவ்வறிவூட்டல் நிகழ்வில் கலந்துகொண்டனர். அதற்கமைய அனைத்து உத்தியோகத்தர்களும் சுமார் 20 பேர் இந்நிகழ்வில் பங்கேற்றதுடன் அனைவருக்கும் ஹோட்டலில் உபசரிப்புகள் செய்யப்பட்டுள்ளன. | மேற்கொண்ட செலவை அறவிட வேண்டும். |
| (ஐ) | 2022 ஒக்டோபர் 06 ஆம் திகதிய 06/2022 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | 2022 திசெம்பர் 31 முதல் 60 வயது பூர்த்தியடைந்த ஊழியர்களைக் கட்டாயமாக ஓய்வு பெறச் செய்ய வேண்டும் என்ற போதிலும், 63 வயது பூர்த்தியடைந்த ஒருவர் வியாபார அபிவிருத்திக் கான | இது தொடர்பாக ஆராய்ந்து சமர்ப்பிக்கின்றேன். | பொது முயற்சிகள் சுற்றறிக்கை ஆலோசனைகளுக்கு முரணாகப் பணியமர்த்தப்பட்ட ஆலோசகருக்குப் பயனின்றி வழங்கப்பட்ட சம்பளத்தைப் |

| | | |
|---|---|---|
| ஆலோசகராக 2024 மே 08 ஆம் திகதி பணியமர்த்தப்பட்டிருந்தார். எனினும் 2024 ஆம் ஆண்டில் அமைச்சின் அல்லது அமைச்சுடன் தொடர்புடைய திட்டங்களுக்குப் புறம்பாகப் புதிய ஆலோசனைப் பணிகள் எதனையும் பெற்றுக்கொள்ள கம்பனி தவறியிருந்ததுடன், இவ் ஆலோசகருக்கு வழங்கப்படும் மாதாந்தக் கொடுப்பனவிலிருந்து வரி விலக்கும் செய்யப்பட்டிருக்கவில்லை. | | பொறுப்பான தரப்பினரிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுடன், செலுத்த வேண்டிய வரித் தொகையை அவரிடமிருந்து கழிக்க வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 67,971,867 இலாபமாகக் காணப்பட்டதுடன், அதற்கு இணையான முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 8,064,123 ஆகும். அதற்கமைய நிதிப் பெறுபேற்றில் ரூபா 59,907,744 வளர்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. சேவை வழங்குவதற்கான செலவு ரூபா 135,939,440 இனால் அதிகரித்த போதிலும், சேவை வருமானம் ரூபா 286,944,802 இனால் அதிகரித்தமை இவ்வளர்ச்சிக்கு முக்கிய காரணமாக அமைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியை நிறுவும் போது உள்நாட்டு மற்றும் சர்வதேச திட்டங்களில், நீர்ப்பாசனத் துறையிலும் ஏனைய அரச நிறுவனங்களில் ஆலோசனைச் சேவைகளை வழங்குதல் மற்றும் திட்ட அறிக்கைகளைத் தயாரித்தல் போன்ற நோக்கங்களைக் கொண்டிருந்த போதிலும், கடந்த ஆண்டுகளில் வெளிவாரி நிறுவனங்களிடமிருந்து ஆலோசனைப் பணிகளைப் பெற்றுக்கொள்ளவில்லை. அமைச்சரவை தீர்மானமொன்றின் மூலம் கொள்வனவுச் செயன்முறைக்கு அப்பால் நீர்ப்பாசன அமைச்சின் கீழ் வரும் திட்டங்களின் ஆலோசனைச் சேவைகளை நேரடியாகவே | இது தொடர்பாக ஆராய்ந்து சமர்ப்பிக்கின்றேன். | தனியார் துறையின் ஆலோசனைச் சேவைகளைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | கம்பனிக்குப் பெற்றுக்கொள்வதற்கு முக்கியமாக விடயப்பரப்பிற்குரிய அமைச்சு மற்றும் அதன் திட்டங்கள் மூலம் ஒப்படைக்கப்படும் பணிகளை மாத்திரமே ஆற்றியிருந்தது. அதற்கமைய கம்பனியின் இருப்பானது விடயப்பரப்பிற்குரிய அமைச்சு மற்றும் அதன் திட்டங்கள் மூலம் ஒப்படைக்கப்படும் பணிகளில் மாத்திரமே தங்கியிருந்தது. | | |
| (ஆ) | நக்கிள்ஸ் மற்றும் “வெவ்கம் புபுதுவ“ ஆகிய இரு திட்டங்களுக்காகப் பணியமர்த்தப்பட வேண்டிய ஊழியர்கள் மற்றும் அவர்களின் ஊதியம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கையில், அவ் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களுக்கு மேலதிகமாகப் பல்வேறு கடமைகளை ஒப்படைத்தும் புதிய பதவிகளை உருவாக்கியும் பெருமளவானோர் இத்திட்டங்கள் தொடர்பாக கம்பனிக்கு அத்தியாவசியமற்ற பணிகளுக்காகப் பணியமர்த்தப்பட்டிருந்தனர். கணக்காய்விற்குப் பெற்றுக்கொள்ள முடிந்த தகவல்களின் படி, அவ்வாறு பணியமர்த்தப்பட்ட 10 பேருக்கு 2024 பெப்ரவரி 06 முதல் 2024 திசெம்பர் 31 வரையான காலப்பகுதியில் ரூபா 7.05 மில்லியன் தொகை கம்பனியால் சம்பளமாக வழங்கப்பட்டிருந்தது. | இது தொடர்பாக ஆராய்ந்து சமர்ப்பிக்கின்றேன். | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களுக்குப் புறம்பாகப் பணியமர்த்தப்பட்ட அத்தியாவசியமற்ற ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை அவ்வாறு பணியமர்த்த நடவடிக்கை எடுத்த தரப்பினரிடமிருந்து அறவிட வேண்டும். |
| (இ) | பல்வேறு பட்டறைகளுக்காகக் கம்பனியினால் இணைத்துக்கொள்ளப்படும் வளவாளர்களுக்குக் கொடுப்பனவுகளைச் செய்யும் போது உயர் திறமை கொண்ட தொழில்முறை நிபுணர்களுக்கு ஒரு நாளைக்கு ரூபா 50,000 கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்ததுடன், உயர் திறமை என்பது யாது எனக் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. மாதிரிப் பரிசோதனையின் போது நக்கிள்ஸ் திட்டத்தின் ஆரம்பக் கணக்கெடுப்பு அறிக்கைகளைத் தயாரிப்பதற்காக 2023 நவம்பர் 02 முதல் நவம்பர் 05 வரை நடைபெற்ற பட்டறையில் வளவாளர்களாகப் பங்கேற்ற | இது தொடர்பாக ஆராய்ந்து சமர்ப்பிக்கின்றேன். | கணக்காய்விற்குத் தகவல்களைப் பரிசோதிக்கக் கூடிய வகையில் அவற்றைப் பேணுவதற்கும் நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கலாநிதி, பேராசிரியர்களுக்கு வளவாளர் கொடுப்பனவாக மொத்தம் ரூபா 840,000 உம் சமூகவியல் பேராசிரியரொருவருக்கு ஒரு நாளைக்கு ரூபா 40,000 வீதம் 24 நாட்களுக்கு ரூபா 960,000 உம் வழங்கப்பட்டிருந்தது. இக்கொடுப்பனவுகளின் சட்டபூர்வத்தன்மையைப் பரிசோதிப்பதற்கு உரிய பணிப்பாளர் சபை அறிக்கைகள் மற்றும் பணிப்பாளர் சபை பத்திரங்களைக் கணக்காய்வு கோரியிருந்த போதிலும், 2026 மார்ச் 30 வரை அத்தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | | |
| (ஈ) | சில்லறைக்காசு முன்பணம் மற்றும் குறித்த பணிக்கான முன்பணம் ஆகியவற்றைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக முறையான பொறிமுறையொன்று இல்லாத காரணத்தால் கம்பனியின் சில்லறைக்காசு முன்பணம் ரூபா 50,000 உம் மற்றும் குறித்த பணிக்கான முன்பணம் 16 சந்தர்ப்பங்களில் ரூபா 119,725 முதல் ரூபா 1,612,000 வரையிலும் 2024 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்ததுடன், தற்காலிக முன்பணங்களைத் தீர்ப்பதற்காக 20 சந்தர்ப்பங்களில் 17 நாட்கள் முதல் 76 நாட்கள் வரையான காலம் எடுக்கப்பட்டிருந்தது. மேலும் சில்லறைக்காசு முற்பணத்திலிருந்து வழங்கக்கூடிய அதிகப்பட்சத் தொகையும் தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை. | விழிப்புணர்வுத் திட்டங்கள், பல்வேறு சமூகப் பட்டறைகள் போன்றவை குறிப்பாக அனுராதபுரம், மன்னார், திருகோணமலை போன்ற மிகத் தொலைதூர மாவட்டங்களில் நடத்தப்பட்டுள்ளதால் பட்டறைகள்/திட்டங்களை நடத்துவதற்கான வசதிகளைப் பெற்றுக்கொள்ளும் போது அப்பிரதேசங்களிலுள்ள ஹோட்டல் வளாகங்களைத் தெரிவு செய்ய வேண்டியுள்ளது. மேலும் இவ் ஹோட்டல் வசதிகளை வழங்கும் போது பட்டறைகள்/ திட்டங்கள் முடிவடைந்த பின்னர் சமர்ப்பிக்கப்படும் பற்றுச்சீட்டுக்களைத் தீர்க்கும் முறைமைக்கு அவ் ஹோட்டல் முகாமைத்துவங்கள் உடன் படாததால் முன்னதாகவே திட்டங்களின் கணிசமான தொகையை (75%) கோருகின்றனர். அத்தகைய கொடுப்பனவைச் செய்ய ஹோட்டல் முகாமைத்துவங்கள் ஒப்பந்தம் செய்ய விரும்பாதமையாலும், வேறு மாற்று வழிகள் இன்மையாலும் அத்திட்டத்தின் திட்டங்கள் /பட்டறைகளின் செலவுகளுக் காக உத்தியோகத்தர்களுக்கு முன்பணங்களை வழங்குவதன் மூலம் இப்பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. | சில்லறைக்காசு மற்றும் தற்காலிக முன்பணங்களை வழங்குவதை முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுடன், முற்பணங்களைப் பெற்றுக்கொண்ட பணி முடிந்தவுடன் அவற்றைத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கிங் நில்வலா திருப்பும் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாகச் சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையொன்றைத் தயாரிக்கும் ஆலோசனைப் பணிக்காக 2017 ஏப்ரல் 28 ஆம் திகதி விவசாய, கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சுடன் கம்பனி ஒப்பந்தமொன்றைச் செய்திருந்ததுடன், திருத்தப்பட்ட ஒப்பந்தப் பெறுமதி ரூபா 38.86 மில்லியனாகும். ஒப்பந்த உடன்படிக்கையின் படி, உரிய பணிகள் 09 மாதங்களுக்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்ற போதிலும், கணக்காய்வு செய்யப்பட்ட திகதியான 2025 ஓகஸ்ட் 29 வரையில் ஒப்பந்தம் செய்யப்பட்டு 08 ஆண்டுகள் கடந்திருந்தும், உரிய பணி பூர்த்தி செய்யப்படாதிருந்தது. | இது தொடர்பாக ஆராய்ந்து சமர்ப்பிக்கின்றேன். | 09 மாதங்களுக்குள் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை 08 ஆண்டுகள் கடந்தும் பூர்த்தி செய்யப் பட்டிராமை தொடர்பாகப் பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | ஒப்பந்தப் பெறுமதி ரூபா 5.82 மில்லியனைக் கொண்ட முன்மொழியப்பட்ட யடிமஹாண நீர்த்தேக்கத் திட்டத்தின் சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை யொன்றைத் தயாரிப்பதற்காகத் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையுடன் கம்பனி 2021 மார்ச் 10 ஆம் திகதி ஒப்பந்தம் செய்திருந்ததுடன், அது 2022 திசெம்பர் 31 ஆம் திகதியளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டும். இத்திட்டத்தின் இறுதி அறிக்கையை வெளியிடுவதற்காக அதற்கு மேலதிகமாகப் பொதுமக்கள் கருத்துக்களின் அடிப்படையில் மேலதிக அறிக்கையொன்றை மத்திய சுற்றாடல் அதிகார சபைக்குக் கம்பனி வழங்க வேண்டும் என்ற போதிலும் கணக்காய்வு செய்யப்பட்ட திகதியான 2025 ஓகஸ்ட் 29 வரையிலும் அம்மேலதிக அறிக்கை வெளியிடப்படவோ நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக ஆராய்ந்து சமர்ப்பிக்கின்றேன். | குறித்த திகதிக்குள் பணியை பூர்த்தி செய்யாமை தொடர்பாகப் பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) | கல்கெகண்டிய குளத்தை அமைப்பதற்கான ஆரம்பச் சூழல் ஆய்வொன்றை மேற்கொள்வதற்காக ரூபா 3.63 மில்லியன் பெறுமதியான ஆலோசனை ஒப்பந்தமொன்று நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக 2022 ஏப்ரல் 29 ஆம் திகதி எட்டப்பட்ட ஒப்பந்த உடன்படிக்கையின் படி இத்திட்டம் 2022 ஜுன் 29 ஆம் திகதியளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் 2025 ஓகஸ்ட் 15 வரையில் திட்டத்தின் காலப்பகுதி ஆறாவது தடவையாகவும் நீடிக்கப்பட்டிருந்ததுடன், கணக்காய்வு செய்யப்பட்ட திகதியான 2025 ஓகஸ்ட் 29 வரையிலும் இறுதி அறிக்கை வெளியிடப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக மேற்படி ஆராய்ந்து சமர்ப்பிக்கின்றேன். |
| (ஈ) | உலர் வலய விவசாயிகளுக்காகக் காலநிலை ஆலோசனை முறைமையொன்றை நிறுவுவதற்கு ஆதரவளிப்பதற்காக டிஜிட்டல் முறைமையை வலுப்படுத்துவதற்கான ஆலோசனைச் சேவைகளை வழங்க ரூபா 75.86 மில்லியன் ஒப்பந்தம் நீர்ப்பாசன அமைச்சினால் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் ஆற்றியிருக்க வேண்டிய பணிகளில் தற்போதுள்ள டிஜிட்டல் முறைமையை வரைபடமாக்குதல் எனும் பணி மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. அதற்காக, 2024 திசெம்பர் 31 ஆம் திகதியளவில் ரூபா 7.52 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் கால நீடிப்பும் 2025 மார்ச் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்திருந்தது. | இது தொடர்பாக மேற்படி ஆராய்ந்து சமர்ப்பிக்கின்றேன். |
| (உ) | “வெவ்கம் புபுதுவ“ திட்டத்தின் மூலம் மல்வத்து ஓயா, யா ஓயா மற்றும் மீ ஓயா நதிப் பள்ளத்தாக்குகளில் வெள்ள முகாமைத்துவத்தைச் செய்வதற்கான தரமான தொழிற்பாட்டு நடைமுறையொன்றைத் தயாரிப்பதற்கான ஒப்பந்தம், கம்பனிக்கு ரூபா 16.92 மில்லியனுக்கு 2024 ஓகஸ்ட் 15 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்தது. இவ்வொப்பந்தத்தின் திட்டக் காலம் 10 மாதங்கள் அதாவது 2025 ஜுன் 15 ஆம் திகதியளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்ற போதிலும், கணக்காய்வு செய்யப்பட்ட திகதியான 2025 ஓகஸ்ட் 21 வரையில் ஆரம்ப அறிக்கை மாத்திரமே வெளியிடப்பட்டிருந்தது. | இது தொடர்பாக மேற்படி ஆராய்ந்து சமர்ப்பிக்கின்றேன். |

### 3.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல்வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | GCF நகிள்ஸ் திட்டத்துடன் எட்டப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையில், கம்பனிக்கு வழங்கப்பட வேண்டிய இலாப விகிதாசாரம் குறித்துக் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. திட்டத்திற்காக நிறுவனம் செலவிடும் செலவீனங்களை மாத்திரமே மீளப் பெற்றுக்கொள்ள முடியும் என அதில் காணப்பட்டது. இருப்பினும், நகிள்ஸ் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் பங்காளர் (Implementing Partner) என்ற ரீதியில், மீளாய்வாண்டிற்குள் ரூபா 7.07 மில்லியன் வருமானமாக அத் திட்டத்திலிருந்து அறவிடப்பட்டிருந்தது. | நகிள்ஸ் திட்டத்துடன் எட்டப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் செலவினம் மாத்திரம் மீளளிக்கப்பட முடியும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் உதவிச் சேவை வழங்கலுக்காக ஏற்கப்பட்ட செலவினமும் மீளளிக்கப்பட்டிருந்தது. | உதவிச் சேவைகளை வழங்குவதற்காக ஏற்பட்ட செலவீனங்கள் ஈடுசெய்வதற்கு ஏதுவாக உடன்படிக்கையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | பல்வேறு பணிகளுக்காக கம்பனியால் ஆலோசகர்கள் பணியமர்த்தப்பட்டிருந்ததுடன், 2025 ஆம் ஆண்டில் இவ்வாறான 26 ஆலோசகர்களுக்கு மொத்தமாக ரூபா 38.74 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டிருந்த போதிலும், கம்பனிக்கு அவர்களால் வழங்கப்பட்ட பங்களிப்பைத் திட்டவட்டமாக அடையாளம் காண முடியவில்லை. மாதிரிப் பரிசோதனையின் போது, 4 ஆலோசகர்களுக்கு ரூபா 1.6 மில்லியன் செலுத்துவதற்கு அடிப்படையாக அமைந்த தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும், குறித்த பணி முறையாக நிறைவேற்றப்பட்டது என்பதற்கோ அல்லது அது தொடர்பான தகவல்கள் சரியானது என்பதற்கோ எவரும் சான்றுப்படுத்தியிருக்க வில்லை. அத்துடன் அவர்களது வருகையை உறுதிப்படுத்து வதற்கான விரல் அடையாள இயந்திரப் பதிவுகளும் சமர்ப்பிக்கப்படவில்லை. | இது தொடர்பாக ஆராய்ந்து சமர்ப்பிக்கின்றேன். | கணக்காய்வின் போது தகவல்களைப் பரிசோதிக்கக் கூடிய வகையில், ஆலோசனை வழங்கல் கொடுப்பனவுகள் தொடர்பான அனைத்துத் தகவல்களும் பேணப்பட வேண்டும் என்பதுடன், அவை உரிய காலப்பகுதிக்குள் வழங்கப்பட வேண்டும். வருகை மற்றும் வெளியேறல் விரல் அடையாள இயந்திரத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். |

## 3.4 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | புனரமைக்கப்பட்ட 330 குளங்களின் ஒதுக்கீட்டு நிலங்களைப் பிரித்து, நில அளவை செய்து, சட்டரீதியான வரைபடங்களைத் தயாரிப்பதற்கான ரூபா 283.45 மில்லியன் பெறுமதியான ஒப்பந்தம் 2024 பெப்ரவரி 29 அன்று "வாவ்கம் புபுதுவ" திட்டத்தினால் கம்பனிக்கு வழங்கப்பட்டது. இருப்பினும், குறித்த பணியைச் செய்வதற்குத் தேவையான மனிதவளம் மற்றும் ஏனைய பௌதீக வளங்கள் கம்பனியிடம் இல்லாத காரணத்தினால், 2024 மார்ச் 15 அன்று இப்பணி ரூபா 137.52 மில்லியனுக்கு ஒரு தனியார் கம்பனிக்கு துணை ஒப்பந்தமாக வழங்கப்பட்டது.<br><br>துணை ஒப்பந்தத்தை வழங்குவதில் பின்பற்றப்பட்ட பெறுகை நடைமுறை தொடர்பாகவும் அது தொடர்பிலான கொடுப்பனவுகள் தொடர்பாகப் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன. | | |
| (i) | பெறுகை வழிகாட்டியின் 2.7.5 மற்றும் 2.8.4 பந்திகளுக்கமைய, பெறுகைக் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு என்பன நியமிக்கப்பட்டிருக்க வேண்டும். எனினும், இப் பெறுகைக்கான அவ்வாறு நியமிக்கப்பட்டிருக்கவில்லை. இருப்பினும், கம்பனியின் நிதி முகாமையாளர், மனித வள முகாமையாளர் மற்றும் திட்ட முகாமையாளர், ஆகியோர் இப் பெறுகை தொடர்பான ஏல ஆவணங்களைத் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவாகச் செயற்பட்டு மதிப்பீடு செய்திருந்ததுடன், முறையான அனுமதியின்றி 2024 மார்ச் 15 அன்று பெறுகைக்கான ஒப்பந்தம் கையெழுத்திடப் பட்டிருந்தது. | இது தொடர்பாக நீண்ட விளக்கம் தேவைப்படுவதால், அத் தகவல்களைத் திரட்டி முறையாகக் கோப்புப்படுத்தி விளக்கத்துடன் எதிர்காலத்தில் சமர்ப்பிக்க எதிர்பார்க்கப்படுகிறது.<br>' | பெறுகை வழிகாட்டியை மீறிச் செயற்பட்ட அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | பெறுகை வழிகாட்டியின் 3.2.2 பந்திக்கமைய, ஏலங்களைக் கோரும் போது குறித்த பெறுகை விளம்பர மானது ஆகக்குறைந்தது அதிக விற்பனையைக் கொண்ட ஒரு தேசியப் பத்திரிகையிலும் உரிய இணையத்தளங்களிலும் வெளியிடப் பட வேண்டும். ஏனினும், கம்பனி அதன்படி செயற்பட்டிருக்கவில்லை. குறிப்பாக வேலைவாய்ப்பு விளம்பரங்களை வெளியிடும் 'Top Job" எனும் இணையதளத்தில் மாத்திரம் இவ்விளம்பரத்தை வெளியிட்டிருந்தது. | மேற்படி | மேற்படி |
| (iii) | அரசாங்கக் பெறுகை வழிகாட்டியின் 5.3.11 இற்கமைய, ஏலதாரர்களிடமிருந்து பிணைகளைப் பெற்றுக்கொள்வதற்கு | மேற்படி | மேற்படி |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் ஏல மதிப்பீட்டின் போது ஏலதாரர்களின் நிதி மற்றும் பௌதீக வளங்கள் குறித்து முறையான மதிப்பீடு செய்யப்படவில்லை. | | |
| (iv) | 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரை, இவ் ஒப்பந்தத்தின் கீழ் ஒரு தனியார் நிறுவனத்திற்குப் போக்குவரத்து வசதிகளை வழங்கியமைக்காக ”Cab Months” என்ற அடிப்படையில் ரூபா 15.13 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. இதன்போது, துணை ஒப்பந்தக்காரரால் அவர்கள் பயன்படுத்திய வாகனங்களின் ”Cab Months” எண்ணிக்கை மாத்திரமே சான்றுப்படுத்தப்பட்டிருந்தது. பயன்படுத்தப்பட்ட வாகனங்கள், வாகன இலக்கங்கள், பயணித்த இடங்கள், பயன்படுத்திய அதிகாரி யார், நாளாந்தம் ஓடிய கிலோமீற்றர் அளவு மற்றும் அதிகாரிகளின் கையொப்பத்துடன் கூடிய பயணப் பதிவேடுகள் போன்ற எந்தவொரு ஆவணமுமின்றி இக்கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்தன. மேலும், ஒரு ”Cab Month” இற்கு எவ்வளவு தொகை செலுத்தப்படும் என்பது குறித்தும் எவ்விடத்திலும் உடன்பாடு எட்டப்படவில்லை. | மேற்படி | போக்குவரத்து வசதிகளுக்காகச் செலுத்தப்பட்ட தொகையின் துல்லியத்தன்மையை உறுதிப்படுத்த விசாரணையொன்று நடத்தப்பட வேண்டும். மேலும் போக்குவரத்து வசதிகளுக்காக வாகனங்களைப் பயன்படுத்திய உத்தியோகத்தர்களின் கையொப்பத்துடனான ஓட்ட அட்டவணைகள், பயணித்த கிலோமீற்றர் விபரங்கள் பரீட்சிக்கப்பட்டதன் பின்னரே கொடுப்பனவுகள் செய்யப்பட வேண்டும். அவ்வாறு செயற்படாது கொடுப்பனவுகளை மேற்கொண்ட அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (v) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியான 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு, உப-ஒப்பந்தக்காரருக்கு ரூபா 99.8 மில்லியன் செலுத்தப்பட்டிருந்ததுடன், இது இணங்கப்பட்ட மொத்த ஒப்பந்தப் பெறுமதியின் 73 சதவீதமாகும். உப-ஒப்பந்தக்காரருடன் எட்டப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம், ஒப்பந்தப் பெறுமதியின் 70 சதவீதக் கொடுப்பனவு வழங்கப்படும் நிலைக்கு முன்னர் 330 குளங்கள் தொடர்பான அனைத்து அளவீட்டுப் பணிகளும் பூர்த்தி செய்யப்பட்டு, | இது தொடர்பான விளக்கங்கள் பின்னர் சமர்ப்பிக்கப்படும். | உடன்படிக்கையின் படி செயற்படாது கொடுப்பனவுகளை மேற்கொண்டமைக்கு பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அவற்றுக்கான வரைபடங்களும் தயாரிக்கப் பட்டிருக்க வேண்டும். எனினும், அத்தகைய பணிகள் நிறைவுற்றிருக்கவில்லை. | | |
| (vi) | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி, 2024 திசெம்பர் 31 ஆம் திகதியன்று 16 குளங்கள் தொடர்பான எவ்வித பணிகளும் முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், நிறைவு செய்யப்பட்டதாகக் கூறப்பட்ட 316 குளங்களுக்கான வரைபடங்கள் நில அளவைத் திணைக்களத்தினால் சான்றளிக்கப் பட்டிருக்கவில்லை. ஒப்பந்த உடன்படிக்கையின் படி இப்பணிகள் 2024 திசெம்பர் 20 ஆம் திகதியுடன் பூர்த்தியடைந்திருக்க வேண்டிய போதிலும், 2025 ஓகஸ்ட் 31 வரை காலநீடிப்புச் செய்யப்பட்டிருந்தது. இருப்பினும், கணக்காய்வுத் திகதியான 2025 ஓகஸ்ட் 21 வரையிலும் குறித்த பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | மேற்படி | குறித்த பணிகளை துரிதமாக நிறைவு செய்வதற்கு அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (vii) | இந்த ஒப்பந்தத்துடன் தொடர்புடைய கட்டுப்பாட்டுப் புள்ளிகளை நிறுவுதல், ஒதுக்கீட்டு எல்லைகளைக் குறித்தல் மற்றும் நியதிச்சட்ட வரைபடங் களைத் தயாரித்தல், நீர்ப்பாசனத் தொகுதி ஒதுக்கீட்டு நிலங்களை சட்டவிரோதமாகக் கையகப்படுத்தி யுள்ள நபர்கள் பற்றிய விபரங்கள் மற்றும் ஒதுக்கீட்டு நிலங்களில் அமைந்துள்ள குளங்கள் தொடர்பான தகவல்களை சமர்ப்பிக்குமாறு கணக்காய்வு கோரியிருந்த போதிலும், 2025 ஓகஸ்ட் 21 வரை கம்பனி அத்தகவல்களை வழங்கத் தவறியிருந்தது. | மேற்படி | தகவல்களைப் பரிசோதிக்கக் கூடிய வகையில் ஆவணங்களைப் பேணுவதற்கும், நிர்ணயிக்கப்பட்ட காலவரையறைக்குள் தகவல்களை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (viii) | இச்சேவை ஒப்பந்தத்தை மேற்பார்வை செய்வதற்காகப் புறநிலை ஆலோசகர் ஒருவர் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன், அவருக்கு 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரை ரூபா 3.85 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. எனினும், அக்கொடுப்பனவுகளுக்கு அடிப்படையாக அமைந்த அவரது பணிகள், மேற்பார்வை அறிக்கைகள் அல்லது கூட்டக் குறிப்புகள் போன்ற எவ்வித தகவல்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | மேற்படி | மேற்படி |
| (ix) | அனைத்து “எல்லாங்க“ நீர்ப்பாசனத் தொகுதிகள் தொடர்பான ஆலோசனை, தொழில்நுட்ப வழிகாட்டல் மற்றும் எல்லை நிர்ணயப் பணிகளுக்கான திட்ட ஒருங்கிணைப்பு என்பன ஓய்வுபெற்ற | மேற்படி | ஆலோசகருக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது, பணிகளின் அடைவு மட்டத்துடன் |

| | | | |
|---|---|---|---|
| | அமைச்சின் செயலாளர் ஒருவரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. குறித்த ஆலோசகருக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்கையில் அவரது பணிப்பங்களிப்புடன் இணைந்த முறையான கொடுப்பனவு அடிப்படை எவையும் பின்பற்றப்படவில்லை. அவர் கலந்து கொள்ளும் கலந்துரையாடல்கள் மற்றும் களப் பரிசோதனைகளுக்கு நேரடியாகச் சமூகமளித்தால் ஒரு முழு நாளுக்கு ரூபா 25,000, அரை நாளுக்கு ரூபா 15,000, இணையவழியாகக் கலந்து கொள்வாராயின் ரூபா 10,000 தொகையும் தனிப்பட்ட வாகனத்தைப் பயன்படுத்துவாராயின் ஒரு கிலோமீற்றருக்கு ரூபா 110 என்ற அடிப்படையில் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டிருந்தன. | | தொடர்புடைய அங்கீகரிக்கப்பட்ட முறையான கொடுப்பனவு முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 2017 ஆம் ஆண்டில் மொரகஹகந்த சுற்றுலா விடுதி மற்றும் கண்காணிப்புக் கூடத்தின் கட்டுமானப் பணிகளை மேற்கொண்ட உப-ஒப்பந்தக்காரருக்கு இடைக்காலக் கொடுப்பனவுகளை வழங்கும் போது, பெறுகை வழிகாட்டல்களை மீறிச் செயற்பட்டமையினால் கம்பனிக்கு ரூபா 20.2 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்தது. 2019 பெப்ரவரி 21 அன்று நடைபெற்ற பொது முயற்சிகள் தொடர்பான குழுக் கூட்டத்தில் இது குறித்து முறையான விசாரணை நடத்தி ஒரு மாதத்திற்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு பரிந்துரைக்கப்பட்டிருந்த போதிலும், அப்பரிந்துரை நடைமுறைப்படுத்தப்படவில்லை. மேலும், கணக்காய்வுத் திகதியான 2025 ஓகஸ்ட் 21 வரை குறித்த நட்டத்தை மீளப் பெறுவதற்கான சட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனையைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அவர்களிடமிருந்து கிடைக்கும் அறிவுறுத்தல்களின்படி மேலதிக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். | ஏற்பட்டுள்ள நட்டத்தை மீளப் பெறுவதற்கான சட்ட நடவடிக்கைகளை விரைவாக ஆரம்பிப்பதற்கும், பொது முயற்சிகள் தொடர்பான குழுக் கூட்டப் பணிப்புரைக்கமைய முறையான விசாரணையை முன்னெடுத்து அக்குழுவிற்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.5 மனித வள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நீர்ப்பாசன அமைச்சின் உதவிப் பணிப்பாளராக (பெறுகை) பணியாற்றும் இலங்கை பொறியியல் சேவையின் வகுப்பு II தரம் II ஐச் சேர்ந்த சிவில் பொறியியலாளர் ஒருவரும், 2020 செப்தெம்பர் 28 முதல் “வெவ்கம் புபுதுவ“ திட்டத்தின் திட்டப் பணிப்பாளராகப் பணியாற்றும் உத்தியோகத்தர் ஒருவரும், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் எழுத்துமூல முன்அனுமதியின்றி, 2021 ஜனவரி 07 அன்று நிறுவனத்தின் பிரதம | அரசாங்க சேவையில் மேற்கொள்ளப்படும் நியமனங்கள் மற்றும் சேவை வழங்கல் அடிப்படையில் வழங்கப்படும் நியமனங்கள் என்பவற்றிற்காக, நியமன அதிகாரியான அரசாங்க சேவை ஆணைக்குழுவின் | இந்த நியமனத்திற்காக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன், முறையான நியமனக் கடிதமொன்றும் |

| | | | |
|---|---|---|---|
| | நிறைவேற்று அதிகாரியாகவும் பணிப்பாளர் சபை உறுப்பினராகவும் அமைச்சின் செயலாளரால் நியமிக்கப்பட்டிருந்தனர்.<br><br>மேலும், அமைச்சின் செயலாளரால் பிரதம நிறைவேற்று அதிகாரிக்கு வழங்கப்பட்ட நியமனக் கடிதத்தில் இந்த நியமனத்தின் தன்மை யாதெனக் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை என்பதுடன், அவரது அனைத்துக் கொடுப்பனவுகளுக்கும் பணிப்பாளர் சபையின் அனுமதி மாத்திரமே பெறப்பட்டிருந்தது. | சார்பில் சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் செயற்படுகின்றார். | வழங்கப்பட வேண்டும்.<br><br>மேலும், ஒரே நபருக்கு அவரது நிரந்தரப் பதவிக்கு மேலதிகமாக மேலும் இரண்டு முக்கிய பதவிகளை வழங்கியமை தொடர்பில் நியமனம் வழங்கிய அதிகாரி பொறுப்புக்கூற வேண்டும். |
| (ஆ) | இலங்கை மகாவலி அதிகார சபையின் உதவிப் பணிப்பாளராக (சட்டம்) பணியாற்றிய பெண் உத்தியோகத்தர் ஒருவர், 2021 திசெம்பர் 31 அன்று நீர்ப்பாசன அமைச்சின் செயலாளரால் கம்பனியின் செயலாளர் /சட்ட உத்தியோகத்தர் பதவிக்கு நியமிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த நியமனக் கடிதத்தில் நியமனத்தின் தன்மை, கொடுப்பனவுகள் வழங்கப்படும் முறை மற்றும் ஏனைய நிபந்தனைகள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.<br>இவ்வுத்தியோகத்தர் தற்போது புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தில் பணிப்பாளர் (சட்டம்) பதவியில் முழுநேரக் கடமையில் ஈடுபட்டுள்ளதுடன் 2024 ஆம் ஆண்டில் கம்பனிச் செயலாளர் / சட்ட உத்தியோகத்தராகப் பணியாற்றியமைக்காக 2024 ஜனவரி முதல் ஓகஸ்ட் வரை மாதம் ரூபா 33,700 வீதமும், 2024 செப்தெம்பர் முதல் திசெம்பர் வரை மாதம் ரூபா 53,700 வீதமும் உள்ளடங்கலாக மொத்தம் ரூபா 484,400 மேலதிகக் கொடுப்பனவாக வழங்கப்பட்டிருந்தது. | இது தொடர்பான விளக்கங்கள் பின்னர் சமர்ப்பிக்கப்படும். | முறையான நியமனக் கடிதமொன்றை வழங்குவதோடு, அதற்கமைய மாத்திரமே கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2021 ஜனவரி 01 அன்று நீர்ப்பாசன அமைச்சின் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கு நியமிக்கப்பட்ட பெண் உத்தியோகத்தர் ஒருவர், ஒருங்கிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் முன் அனுமதியின்றி, முன்னாள் நீர்ப்பாசன அமைச்சின் செயலாளரின் 2021 பெப்ரவரி 23 திகதியிட்ட MCB/HRD/AL/001 ஆம் இலக்கக் கடிதத்தின் மூலம் கம்பனியின் திட்ட முகாமையாளர் பதவியின் கடமைகளை ஆற்றுவதற்காக | இது தொடர்பான விளக்கங்கள் பின்னர் சமர்ப்பிக்கப்படும். | திட்ட முகாமையாளர் பதவியின் கடமைகளை ஆற்றுவதற்காக நியமன அதிகாரியின் அனுமதியைப் பெற வேண்டியதுடன், கொடுப்பனவுகளுக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் |

| | | | |
|---|---|---|---|
| | இணைக்கப்பட்டிருந்தார். இக்கடிதத்தில் கடமைகளை ஆற்றுவதற்காக நியமிக்கப்பட்ட காலப்பகுதி தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.<br><br>மேலும், 2022 டிசம்பர் 14 ஆம் திகதிய 2310/29 ஆம் இலக்க இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அரச சேவை ஆணைக்குழுவினால் விதிக்கப்பட்ட நடைமுறை விதிகளின் IX ஆம் அத்தியாயத்தின் 132 ஆம் பந்தியின்படி, ஒரு பதவியில் பதில் கடமையாற்றுவதற்கு அல்லது கடமைகளை ஆற்றுவதற்கு அந்தப் பதவிக்குரிய சேவைக் குறிப்பு அல்லது ஆட்சேர்ப்பு நடைமுறையின் கீழ் அனைத்துத் தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ள, அப்பதவிக்குச் சமமான அல்லது அதற்கு அண்மித்த கீழ்நிலைத் தரத்திலுள்ள உத்தியோகத்தர் ஒருவரையே நியமிக்க முடியும். இருப்பினும், இங்கு முகாமைத்துவ உதவியாளர் (MN-04) சம்பளத் தரத்திலான நிரந்தரப் பதவியில் இருந்த உத்தியோகத்தர் ஒருவர் சிரேஷ்ட முகாமைத்துவ (HM 1-3) சம்பளத் தரத்திலான பதவியொன்றின் கடமைகளை ஆற்றுவதற்காக நியமிக்கப்பட்டிருந்தார்.<br><br>கம்பனியால் திட்ட முகாமையாளர் பதவிக்கான கொடுப்பனவுகளைக் கணிப்பிடும் போது நிறுவனம் HM 1-3 (2016) சம்பளக் குறியீட்டை அடிப்படையாகக் கொண்டிருந்ததுடன், அதற்கு ஏனைய கொடுப்பனவுகள், வருகைக்கான கொடுப்பனவு மற்றும் பயணக் கொடுப்பனவுகள் உள்ளிட்ட ரூபா 11,800 மொத்தக் கொடுப்பனவு ரூபா. 60,908 எனத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இதற்குப் பணிப்பாளர் சபையின் அனுமதி மாத்திரமே பெறப்பட்டிருந்ததுடன், அவ்வாறு வழங்கப்பட்ட கொடுப்பனவு 2024 செப்டம்பர் முதல் ரூபா 84,908 ஆக அதிகரிக்கப்பட்டிருந்தது. | | அனுமதியைப் பெற வேண்டும். மேலும், முறையான நியமனம் மற்றும் அங்கீகாரமின்றி உத்தியோகத்தருக்கு கொடுப்பனவுகளை மேற்கொண்டமை தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2023 திசெம்பர் 03 முதல் மாதாந்தம் ரூபா 200,000 கொடுப்பனவு வழங்கும் அடிப்படையில் கம்பனிக்காக முகாமைத்துவ ஆலோசகர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். அவருக்கு வழங்கப்பட்ட கடமைகளுள் நிறுவனத்தின் வணிகத் திட்டங்களைத் தயாரித்தல், நிறுவனத்தின் செயற்பாட்டுத் திட்டம் மற்றும் கூட்டுத் திட்டத்தைத் தயாரித்தல், புதிய வணிக வாய்ப்புகளைப் | இது தொடர்பாகக் கண்டறிந்து சமர்ப்பிக்கப்படும். | ஒப்படைக்கப்பட்ட பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளனவா என்பதைப் பரிசோதித்துக் கொடுப்பனவுகளை அனுமதிப்பதும் அக்கொடுப்பனவுகளைச் |

பெறுவதற்கான வழிமுறைகளை உருவாக்குதல் மற்றும் வணிகக் கொள்கைகளைத் தயாரித்தல் போன்ற பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்படவில்லை.

சான்றுப்படுத்துவதும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களின் பொறுப்பாக அமைதல் வேண்டும்.